1980 ஜூலை 19]

சென்னை நகரில் நடமாடும் நீதிமன்றங்கள்.

*வினா எண். 23—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மீண்டும் நடமாடும் கோர்ட்டுகளை ஏற்படுத்தும் குறிப்பு எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை நகரில் நடமாடும் நீதிமன்றங்களை மீண்டும் ஏற்படுத்தல் பற்றிய செயற்குறிப்பின் மீதான முடிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்கு காவிரி நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண். 24—திரு ஆர். விஜய ரெகுநாத தொண்டைமான்: திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு பாசனத்துக்கு காவிரி நதித் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : காவிரி நீரை பங்கீடு செய்வது குறித்து மாநிலங்களுக்கிடையே இதுவரை உடன்பாடு ஏற்படவில்லை. இதனால், காவிரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு திருப்பிவிடும் செயற்குறிப்பை அரசு தற்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பரிசீலிக்கப்பெறவில்லை என்றாலும் கூட புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சியை கருத்தில் கொண்டாவது, எப்படி வைகைக் கால்வாயை காங்கிரீட்டில் கட்டி செயல்படுத்தி இருக்கிறோமோ அதுபோலவே இந்த காவிரி நதிக்கால்வாயையும் எடுத்து காங்கிரீட்டில் கட்டும் திட்டத்தை அரசு கொண்டு வந்தால், எஞ்சி இருக்கிற தண்ணீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொடுக்க முடியும். இதை இனியாயினும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பங்கீடு பிரச்னை இன்னும் தீராத சூழ் நிலையில் இப்படி எந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்வது சாத்தியம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர் களே, காவிரி நீர்ப்பங்கீடு ஒப்பந்தம் நம்முடைய மாநிலத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையில் இருக்கும் ஒரு பிரச்சினை. ஆனால் நான் கேட்பது நம்முடைய மாநிலத்திலுள்ள காவிரியின் கால்வாயை காங்கிரீட்டினால் கட்டினால் மண் உறிஞ்சாமல் மிச்சமாகும் தண்ணீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வறட்சி யைப் போக்க உபயோகப்படுத்தலாம். அதை இனியானும் அரசு ஏற்றுச் செய்ய முன்வருமா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, * * * * *
என்பதைப் போல நம்மிடத்தில் உபரி நீர் இருக்கிறது என்று சொல்லுகிற சூழ்நிலையை இது தோற்றுவித்து விடும். அது மேலும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் கொண்டுபோய்விடும் என்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்தை இப்போது எடுப்பதற்கில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நமக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே காவிரிநீர்ப்பங்கீடு சம்பந்தமாக ஒப்பந் தம்ஒன்று நிறைவேற்றப்படாமலேயே இன்னும்இந்த இரு மாநிலங் களுக்கிடையேயும் பரிசீலனைக்கு வைக்கப்பெற்றிருக்கிறது. அது தவிர இந்த காவிரி ஆற்றில் கட்டப்பெற்றிருக்கும் டாங்குகள் இரண்டு மூன்று மட்டங்கள் வைத்து பிரித்துக் கட்டப்பெற்றிருக் கின்றன. அதாவது மேல் மட்டத்திலே இருக்கிற டாங்கில் தண்ணீர் நிரம்பிய பின்னால்தான் கீழ் டாங்குகளில் பில்அப் பண்ண முடியும். ஆகவே, காவிரி ஆற்றில் வருஷா வருஷம் வெள்ளம் வருகிறபோது, வீணாக கடலிலே போய் கலக்கவிடுவ தற்குப் பதிலாக, அதை இந்த டாங்குகளில் திருப்பிவிட்டால் எல்லா டாங்குகளும் பில்அப் ஆகும். மேற்கே பாய்ந்து கடலிலே வீணாகும் நதியைத் திருப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண் டிருக்கிற நாம், நம்முடைய மாநிலத்தில் வீணாகும் தண்ணீரை அப்படி வீணாக்க விடாமல் டாங்குகளில் பில்அப் பண்ணி வைத் தால் என்ன? அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று கேட்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1980 ஜூலை 19]

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அதிகமாக வெள்ளம் ஏற்பட்டு அது கடலில் போய் கலந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் ஒட்டு மொத்தமாக இப்போது இருக்கக்கூடிய நீர்ப்பாசனம் பெறக் கூடிய பரப்பளவு, யூட்டிலைஸேஷன் இவைகளை மையமாக வைத்து பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம. விரைவில் பேச்சுவார்த்தைகள் வெற்றி கண்டு சுமுகமாக தீர்த்துக் கொண்டால் மற்றபடி பின் இத்திட்டங்களை எடுத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ** ** என்று சொல்லி இந்தப் பிரச்சினை பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டாம் என்ற அர்த்தம் தொனிக்கக்கூடிய முறையில் சொன்னார்கள். கர்நாடக அரசிடமிருந்து அதிகமான நீரைப் பெறவேண்டும் என்றிருந்தாலும் இங்கு நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரை நவீனப்படுத்தி அதிகமான அளவிற்கு விவசாயம் பயன் அடையத்தக்க வகையில் ஏற்பாடு செய்யலாமே. இதற்கு நாம் கர்நாடகா அரசின் அனுமதி பெற வேண்டியதில்லை. யாரும் தண்ணீரைஅதிகமாக எடுத்துக்கொடுங்கள் என்றுசொல்லவில்லை. ஆகவே நான் ஏற்கனவே கூறிய திட்டம் பற்றி இனிமேலாவது பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பழ மொழியை அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்அவர்கள் சொன்னதிலிருந்தும் எடுத்துவிடுவது நல்லது என்றுகூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பழமொழியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு.ரா. உமாநாத் : அது கெட்ட வார்த்தை ஒன்றுமில்லையே·

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கெட்ட வார்த்தை அல்ல. ஆனால், அதன் பொருள் வெளியே தெரிய வேண்டாம் என்றுதான் நீக்குகிறேன். அதுபற்றி விளக்கங்கள் வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : ** ** என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ததற்குப் பிறகு அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொல்லியிருப்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்.

*வினா எண். 25—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா திட்ட செயலாக்கம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) அத்திட்டம் எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அண்டு (ஆ) : இத்திட்டம் பற்றி கேரள மாநில அரசுடன் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவெடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : கோவை மாவட்டத்தில் ஒரு பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஒரு பகுதி வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் இத்திட்டம் நிறைவேற உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேச்சுவார்த்தைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அது வெற்றிகரமாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் திட்டக் கமிஷனால் 1965ல் நிர்ணயிக்கப்பட்டது. அது பாசன வசதிக்காக நிர்ணயம் செய்யப்பட்ட திட்டமா ? அல்லது மின்சார உற்பத்தி நமக்கு அதிகமாகக் கிடைப்பதற்காக போடப்பட்டுள்ள திட்டமா? மின்சார உற்பத்திக்காக போடப்பட்ட திட்ட